# யூன் – 21 – வியாழன்

## புனித அலோசியஸ் கொன்சாகா

## ஆண்டவர் ஆட்சி செய்கின்றார்: பூவுலகம் மகிழ்வதாக!
திபா. 97:1

### முதல் வாசகம் : சீராக் 48 : 1 – 14

இறைவாக்கினர் எலியா நெருப்புபோல எழுந்தார் தீவட்டிபோல் அவருடைய சொல் பற்றியெரிந்தது.மக்கள் மீது பஞ்சம் வரச் செய்தார் தம் பற்றார்வத்தால் அவர்களை எண்ணிக்கையில் சிலராக்கினார். ஆண்டவருடைய சொல்லால் வானம் பொழிவதை நிறுத்தினார் மும்முறை நெருப்பு விழச்செய்தார். எலியாவே உம்முடைய வியத்தகு செயல்களில் நீர் எத்துணை மாட்சிக்குரியவர்! உமக்கு இணையாய் யார் பெருமை பாராட்டக்கூடும்? இறந்தவரை உன்னத இறைவனின் சொல்லால் இறப்பினின்றும் பாதாளத்தினின்றும் எழச்செய்தீர்.மன்னர்களை அழிவுக்கு உட்படுத்தினீர் மேன்மைமிக்கவர்களைப் படுத்த படுக்கையாக்கி வீழ்த்தினீர். கடுஞ்சொல்லைச் சீனாய் மலைமீதும் பழிவாங்கும் தீர்ப்பை ஓரேபு மலைமீதும் கேட்டீர்.பழிதீர்க்கும்படி மன்னர்களைத் திருப்பொழிவு செய்தீர் உம் வழித்தோன்றல்களாக இறைவாக்கினர்களை ஏற்படுத்தினீர்.தீச்சூறாவளியில் நெருப்புக் குதிரைகள் பூட்டிய தேரில் நீர் எடுத்துக்கொள்ளப்பட்டீர். ஆண்டவருடைய சினம் சீற்றமாய் மாறுமுன் அதைத் தணிப்பதற்கும் தந்தையின் உள்ளத்தை மகனை நோக்கித் திருப்புவதற்கும் யாக்கோபின் குலங்களை மீண்டும் நிலைநிறுத்துவதற்கும் குறித்த காலங்களில் நீர் கடிந்து கொள்வீர் என்று எழுதப்பட்டுள்ளது.உம்மைக் கண்டவர்களும் உமது அன்பில் துயில் கொண்டவர்களும் பேறுபெற்றோர். நாமும் வாழ்வது உறுதி.எலியா சூறாவளி சூழ மறைந்தார் எலிசா அவருடைய ஆவியால் நிறைவுபெற்றார் எலிசா தம் வாழ்நாளில் எந்தத் தலைவருக்கும் அஞ்சவில்லை. அவரை அடிபணிய வைக்க எவராலும் முடியவில்லை. அவரால் முடியாதது ஒன்றுமில்லை. இறந்த பிறகும் அவரது உடல் இறைவாக்கு உரைத்தது.அவர் தம் வாழ்நாளில் அரியன செய்தார் இறப்பில் அவருடைய செயல்கள் வியப்புக்குரியனவாய் இருந்தன.

**பதில்பாடல் :** நேர்மையாளர்களே ஆண்டவரில் களிகூருங்கள்.

### நற்செய்தி : மத்தேயு 6 : 7 – 15

அக்காலத்தில் இயேசு தம் சீடர்களுக்குக் கூறியதாவது : நீங்கள் இறைவனிடம் வேண்டும்பொழுது பிற இனத்தவரைப் போலப் பிதற்றவேண்டாம் மிகுதியான சொற்களை அடுக்கிக்கொண்டே போவதால் தங்கள் வேண்டுதல் கேட்கப்படும் என அவர்கள் நினைக்கிறார்கள். நீங்கள் அவர்களைப்போல் இருக்கவேண்டாம். ஏனெனில் நீங்கள் கேட்கும் முன்னரே உங்கள் தேவையை உங்கள் தந்தை அறிந்திருக்கிறார். ஆகவே, நீங்கள் இவ்வாறு இறைவனிடம் வேண்டுங்கள்" விண்ணுலகிலிருக்கிற எங்கள் தந்தையே, உமது பெயர் தூயதெனப் போற்றப்பெறுக!உமது ஆட்சி வருக! உமது திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவது போல மண்ணுலகிலும் நிறைவேறுக! இன்று தேவையான உணவை எங்களுக்குத் தாரும்.எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்தோரை நாங்கள் மன்னித்துள்ளதுபோல எங்கள் குற்றங்களை மன்னியும்.எங்களைச் சோதனைக்கு உட்படுத்தாதேயும், தீயோனிடமிருந்து எங்களை விடுவியும். ("ஆட்சியும் வல்லமையும் மாட்சியும் என்றென்றும் உமக்கே. ஆமென்.")மற்ற மனிதர் செய்யும் குற்றங்களை நீங்கள் மன்னிப்பீர்களானால் உங்கள் விண்ணகத் தந்தையும் உங்களை மன்னிப்பார்.மற்ற மனிதரை நீங்கள் மன்னிக்காவிடில் உங்கள் தந்தையும் உங்கள் குற்றங்களை மன்னிக்க மாட்டார்"என்றார்.

**தியானம்:** இன்றைய நற்செய்தியில் இயேசு கற்பித்த செபத்தின் வல்லமை விளக்குவது "உமது ஆட்சி வருக என்ற மன்றாட்டு இறைவனின் திருவுளம், இறையாட்சி இந்த உலகில் நிறைவேறுவதே அன்றி வேறெதுவுமில்லை. எனவே இறையாட்சி இறைதிருவுளம் ஒன்றேயன்றி வேறு வேறானவையல்ல. இந்த இறையாட்சி மூன்று பரிமாணங்களைக் கொண்டது. பொருளாதார நிறைவு: இன்று தேவையான உணவு எங்களுக்குத்தாரும், என்ற மன்றாட்டு பொருளாதார நிறைவை சுட்டிக்காட்டுவதாகவே இருக்கிறது. பொருளாதார நிறைவுதான் இறையாட்சி என்பதை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது, என்றாலும் பொருளாதார நிறைவு இறையாட்சியின் ஒரு முக்கிய அம்சம் என்பதை நாம் மறுக்கமுடியாது. உறவு வாழ்வின் நிறைவு: "எங்களுக்கு எதிராககுற்றம் செய்வோரை என்ற மன்றாட்டு பிறரோடு இறைவனோடுமான உறவு முழுமை நோக்கியதாக இருப்பதற்கான அழைப்பாக இருக்கின்றது. உறவு வாழ்வின் மிகப்பெரிய தடைகளான வெறுப்பும் கசப்புணர்வும் மன்னிப்பின் மூலம் அகற்றப்படும் போது நம் உறவு வாழ்வு செழிக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. ஆன்மீக வாழ்வின் நிறைவு: கண்ணுக்குத் தெரியாத எதிர் மறை சக்திகளும் நாம் நிறைவான வாழ்வு வாழ தடையாக இருக்கின்றது என்பதையே தீயோன் என்ற சொல் சுட்டிக்காட்டுகின்றது. எனவே தீயோனிடமிருந்து எங்களை விடுவியும். என்ற மன்றாட்டு மூலம் முழுமையை நோக்கிய நம் ஆன்மீக வாழ்வுப் பயணத்திற்கு தடையாக இருக்கின்ற சக்திகளையும் தடைகளையும் வெற்றிகொள்வதற்கென வல்லமையைக் கேட்கிறோம். எனவே நாம் அனைவரும் வெறும் வாய் சொல்லில் மட்டும் இல்லாமல் செயலில் காட்ட அழைப்பு விடுக்கப்படுகிறது..